செய்தி வெளியீடு எண் : 067 நாள் : 09.01.2024

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால்**
**மாணவர்கள் பயன்பெற்று வருவது குறித்து**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்**
**சமூக வலைதளப் பதிவு**

அடித்தட்டு மக்களின் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் நமது திராவிட மாடல் அரசு, கல்வியும் சுகாதாரமும் இரு கண்கள் எனப் போற்றி முன்னுரிமை அளித்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு குழந்தைகூட பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடக்கூடாது, போதிக்கும் வேளையில் ஊன்றிப் பாடங்களைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, நாட்டுக்கே முன்னோடியாக, கடும் நிதிநெருக்கடிக்கு இடையிலும் செயல்படுத்தி வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நாட்டு மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் அன்றாடப் பணிச்சுமையைக் குறைத்து இருக்கிறது.

இன்று தினத்தந்தி குழுமத்தின் சார்பில் வெளியாகும் DT Next நாளேட்டில் வந்த செய்தி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறது!

மாணவச் செல்வங்கள் படிப்பைப் பாதியில் கைவிடுவதை இந்தத் திட்டம் தடுத்து நிறுத்தியது மட்டுமன்றி, பள்ளிக்கூடங்களிலும் சமுதாயத்தில் பல நற்பயன்களுக்கு வித்திட்டு வருகிறது.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சிற்றுண்டி உண்ட பின், மீதமிருக்கும் உணவு வீணாவதில்லை; மாறாக, ஆறாம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியரில் யார் காலை உணவு சாப்பிடாமல் வந்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு அந்த உணவை வழங்குகின்றனர் என்ற செய்தி அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். காலையில் வேலைக்குச் செல்லும் தனது தாயால் சமைக்க முடியவில்லை என்பதால் பசியோடு பள்ளிக்கு வந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஒருவன், பள்ளியில் பகிர்ந்தளிக்கப்படும் சிற்றுண்டியை உண்பதாகக் கூறியதைப் படிக்கும்போது நெகிழ்ந்தேன். அவரைப் போல, பசியோடு வரும் பல மாணவர்களும் உணவருந்திய பின் வகுப்புக்குச் செல்கிறார்கள் என்பதைக் கண்டு, ஒரு நல்ல நோக்கத்தோடு செயல்படுத்தப்படும் திட்டம், மேலும் பற்பல சமூக நன்மைகளுக்கு வித்திடுகிறது நிறைவைத் தருகிறது. உணவை வீணாக்காமல், பகிர்ந்தளிக்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எத்தனைக் கடினமான சூழ்நிலை இருந்தாலும் நம் வருங்காலத் தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற

எனது கனவு, கண் முன்னே பலன் தரும்போது ஏற்படும் மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்!



## Ripple effect for b'fast scheme on school campuses

CHENNAI: The Chief Minister's Breakfast Scheme, since its implementation in September 2022, has not only been instrumental in bringing down dropouts in primary classes but has also been creating a positive ripple effect within school premises and society overall.

Several teachers and members of Self Help Groups (SHGs), speaking to DT Next, said the food never gets wasted. "Instead, we go ahead and distribute it among children of other classes who have reported to school without having breakfast," said a teacher.

Many students of classes 6 to 10, especially in government schools in north Chennai, also said they have eaten breakfast at the school in several instances. Several students and teachers from other TN districts also share similar stories. Aimed at controlling the surging rate of malnourishment and high prevalence of anaemia among TN students, the State government announced the scheme in May 2022. Subsequently, the scheme was introduced for students between classes 1 to 5 in all government schools.

Currently, catering to over 1.14 lakh primary school students studying in 1,545 government schools, the scheme is functional at Rs 33.56 crore. Though the government has made an assurance that the scheme will be extended to other schools in a phased manner, the teachers have already begun to see the positive impact.

The scheme was launched for students of classes 1 to 5

A government school teacher in Korukkupet said, "Once we finish serving students of classes 1 to 5, we quickly check which students of other classes have missed breakfast and serve the rest to them. Over time, we have noticed a greater impact of this practice here and elsewhere."

Interestingly, speaking about how his mother leaves home for work early in the morning, a class 9 student in Tondiarpet government school said, "As my mother finds it difficult to cook breakfast on most days, I have had breakfast at school after the intervention of my school head. There are many students like me, who, for their own reasons, come to school without breakfast. Hence, it is vital to extend the scheme for all classes."

Explaining how these initiatives create a deep impact in society, a city-based educationalist and child rights activist said, "Though the impact of such schemes cannot be measured in numbers, they hold great value and certainly create a powerful ripple effect in society. Feeding every student is vital, especially those who come from backgrounds that cannot afford it for various reasons. The government should extend the scheme to other higher classes and aided schools as well."

mkstalin 09.01.2024

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in